STC.No. 900-2022

நாள் 18.02.2026.

P.W.1 – (ஜெயக்கண்ணன் )

எதிரி ஆஜர்.

மனுவின் பெயரில் சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு எதிரி தரப்பில் **குறுக்கு விசாரணை**

நான் ஏற்கனவே இந்த நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்துள்ளேன். நான் இந்த வழக்கில் தாக்கல் செய்த காசோலையானது கையெழுத்து மாறுப்பட்டுள்ளது என்ற காரணத்திற்காக திருப்பப்பட்டுள்ளது என்றால் சரி. நானும் எதிரியும் நான் எதிரிக்கு பணம் கொடுத்ததாக சொல்லும் காலகட்டத்திலும் எதிரி எனக்கு காசோலை கொடுத்ததாக சொல்லும் காலகட்டத்திலும் இருவரும் நல்ல உறவு முறையில் இருந்தோம் என்பது என் வழக்கு என்றால் உறவு முறை இல்லை. வங்கிக்கு சென்று வருவதன் மூலம் எதிரிக்கு பழக்கம். அந்த காலகட்டத்தில் எனக்கும் எதிரிக்கும் இடையே எந்த முரண்பாடும் இருந்ததாக என்னுடைய கட்சி இல்லை என்றால் சரியல்ல. என் முந்தைய விசாரணையில் என் ஆடிட்டரைக் கேட்டு என் வரவு செலவு, கையிருப்பு விபரங்கள் குறித்து ஆவணங்கள் தாக்கல் செய்ய தயாராக இருந்தேன் என்றால் சரி. நான் என்னை மறுபடியும் விசாரிக்க அனுமதி பெற்ற பின் நான் முந்தைய விசாரணையில் சொல்லியது போல் எனக்கு, எதிரிக்கு பணம் கொடுக்கும் தகுதி இருந்திருந்தால் நான் முந்தைய விசாரணையில் சொன்னதுபோல் அந்த ஆவணங்களை தாக்கல் செய்திருப்பேன் என்றாலும் அவ்வாறு தகுதி இல்லாததால் தாக்கல் செய்யவில்லை என்றால் என்னை அந்த ஆவணங்கள் தாக்கல் செய்ய சொல்லி அறிவிப்பு எனக்கு கொடுக்கவில்லை.

நான் வேறு வழக்கு விபரத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் ஆம். அந்த வழக்கு விபரத்தை எனக்கு யார் தெரிவித்தார்கள் என என் நிருபண வாக்குமூலத்தில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. நிருபண வாக்குமூலம் பத்தி 4 ல் சொல்லியுள்ளேன். நான் சொல்வதுபோல் என் கூடுதல் நிருபண வாக்குமூலத்தில் 4 வது பத்தி என்று ஒன்று இல்லை என்றாலும் நான் வேறு நபர்களின் கைப்பாவையாக செயல்படுவதால் நான் உள்ள நிலை தெரியாமல் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் 4 தாள்கள் கொடுத்திருப்பதாக அர்த்தத்தில் சொன்னேன். என்னால் விசாரிக்கப்பட்ட சாட்சி கதிர்வேல் சாட்சி அளிக்க முன் வராதிருந்தும் நான் அவரை விசாரிக்க மேல் நடவடிக்கை மேற்கொள்ளவில்லை என்றால் நான் அவரை சாட்சியாக அழைக்கவில்லை. அவர் என்னால் உருவாக்கப்பட்ட சாட்சி என்பதால் அவரை நான் அழைக்கவில்லை என்றால் சரியல்ல, அவருக்கு நீதிமன்றத்தில் இருந்து சம்மன் செல்லவில்லை. ஒரு முறை அவரை நீதிமன்றத்திற்கு அழைத்து வந்தேன். அப்போது எதிரி தரப்பில் வரவில்லை.

வேறு வழக்கில் உள்ள சாட்சியம் நான் சார்புடையது அல்லாததை என் வழக்கில் நான் தாக்கல் செய்ய முடியாது என்றால் சரியல்ல. நாங்கள் ஒருவரோடு ஒருவர் இணைந்து எதிரியிடம் பணம் வசூலிக்க முயற்சிப்பதுதான் அந்த வழக்கு என்றால் சரியல்ல. நான் சொல்வதுபோல் என் முன்னிலையில் எதிரி எந்த கையொப்பமும் செய்யாததால்தான் காசோலையில் கையொப்பம் முரண்பாடு என திருப்பப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் வங்கியில் காசோலை தாக்கல் செய்ய செலான் நிரப்பியதாக சொல்லும் செலானை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய எந்த ஆட்சேபணையும் இல்லை

என்றால் சரி. நான் சொல்வதுபோல் எதிரி என் முன்னிலையில் காசோலையை நிரப்பி கையொப்பம் செய்து கொடுத்திருந்தால் காசோலையில் உள்ள விபரங்கள் அனைத்தும் ஒன்றோடு ஒன்று ஒத்து இணைந்திருக்கும் என்றால் அவ்வாறு எதிரி நிரப்பி கையொப்பம் செய்யாததால் கையொப்பம் மாறுபாடு என காசோலை திருப்பப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் சொல்வதுபோல் எதிரியால் எந்த காலகட்டத்திலும் எனக்கு எந்த ஆவணமும் ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை என்றால் சரியல்ல. நான் உருவாக்கப்பட்ட காசோலையின் பெயரில் இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளதால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டியது என்றால் சரியல்ல.

பு.சா.ஆ.7 மற்றும் 8 இந்த வழக்கிற்கு சம்மந்தம் உடையது அல்ல என்றால் சரியல்ல. எதிரி நான் சொல்வதுபோல் எனக்கு எந்த பணமும் கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல. நான் வழக்கை நிரூபிக்க கடமைப்பட்டவன் என்றால் சரி. நான் வழக்கை நிரூபிக்க தவறியதால் எதிரி விடுவிக்கப்படவேண்டும் என்றால் சரியல்ல.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

18/7/24

நீதித்துறை விரைவு நடுவர்
திருவில்லிபுத்தூர்.